**செய்தி வெளியீடு எண்: 215** **நாள்: 28.03.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>போக்குவரத்து ஆணையர்/ சாலைப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்,</u>**

மத்திய மோட்டார் வாகன விதி 1989 ல் பின்வரும் விதித்திருத்தங்களை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது.

இத்திருத்தத்தில் முகவரி மற்றும் வயதிற்கு சான்றாக “ ஆதார் அட்டை” சமர்பிக்க திருத்தம் செய்யப்பட்டுள்ளது, மேலும் பழகுனர் உரிமம், புதிய ஓட்டுநர் உரிமம், உரிமத்தில் விலாசமாற்றம் மற்றும் உரிமம் புதுப்பித்தல் போன்றவற்றிற்கு வெவ்வேறு படிவங்கள் முன்பு பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது மேற்கண்ட அனைத்து பணிகளையும் படிவம் 2 லேயே பூர்த்தி செய்ய திருத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் தங்களின் மேற்கண்ட தேவைகளை ஒரே படிவத்தில் பூர்த்தி செய்து 01.04.2018 முதல் பயன்பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**